# கண்ணீர் அஞ்சலி



திரை கடல் ஓடித்
தமிழனின் சுதந்திரம்
தேடப் புறப்பட்ட
சூரியப்
புதல்வர்களுக்கு
எங்கள்
கண்ணீர் அஞ்சலி

விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர்

**கந்தையா**
**பேரின்பநாதன்**



ஈழமுரசு ஆசிரியர்

**கந்தையா**
**கஜேந்திரன்**

கோல்வ் கோல்ட் ஹவுஸ்
அகிலன் வீடியோஸ்
ஷாலினி உணவகம்
யாழினி சென்ரர்
ஸ்ரீ பாரதி அச்சகம்

# வீரஅஞ்சலி

தேசியவீரர்
**கந்தையா பேரின்பநாதன்**
**விடுதலைப்புலிகளின் அனைத்துலக**
**நிதிப்பொறுப்பாளர்**
**பிறப்பு:10-10-1964**

தேசியவீரர்
**கந்தையா கஜேந்திரன்**
**விடுதலைப்புலிகளின் பிரெஞ்சுக்கிளையின்**
**நீண்டகால உறுப்பினர்**
**ஈழமுரசுப் பிரதம ஆசிரியர்**
**பிறப்பு:17-04-1966**

**வீரமரணம்: 26-10-1996**

## புதிய பார்வையும் புரட்சிப்பயணமும்

**புதிய பார்வையும் புரட்சிப் பயணமும் !**
**குழந்தை உள்ளமும் குமுறும் நெஞ்சமும்**
**இழந்த தமிழமண் பெறவென் றஞ்சிடா**
**துணிந்த வீரமும் அணிந்த நாயகர் !**

**செருவில் ஆடிடும் எமது வீரர்கள்**
**உறுதி கொண்டிட உழைத்த நாதனை**
**வெறியி லாடியோர் உருக்கு லைத்தனர்**
**அறியதெம் மனம் அனலிலாடுது !**

**தமிழர் மண்ணினைக் காணும் பணியினில்**
**தன்னைத் தந்தவர் தம்பி கஜனெனும்**
**தங்கப் பேனாவைத் தரணி இழந்தது**
**எங்க ளஞ்சலி கண்ணீர்த் துளிகளே !**

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்–யேர்மனிக்கிளை**

# வீர வணக்கம்



கந்தையா கஜேந்திரன்(கஜன்)
(தமிழீழம் .கோண்டாவில்)
(ஈழமுரசு ஆசிரியர்)
தாயக மண்ணில் :17.04.1966
வீரமரணம் :26.10.1996

தமிழரை அடக்குவதற்குப்
புது வழியாம்-பாவம்
மொசட்டும்-அமெரிக்காவும்
கலந்த மூளையால்
வெறிபிடித்து ஆடுகின்றது

"கஜனும்" "நாதனும்"
குண்டுக்கிரையாகவில்லை
தமிழீழவிடுதலைக்கு
உரமாகின்றார்கள்.
ஏனம்மா சந்திரிகா
தமிழீழவிடுதலைக்கு
நீ
உரம் போடுகின்றாய்.

நீபோடும் உரத்துக் கெல்லாம்
கணக்கு வைப்போம்
புலிகள்...
கணக்கிலும்.. கடமையிலும்
தவறுவதில்லை.

சகோதரர்களே!
மின்குமிழைக் கேட்டால்
சொல்லும்-நீங்கள்
விடுதலைக்கு
விழித்திருந்ததை.

சகோதரர்களே!
தெருக்களை கேட்டால்
சொல்லும்-நீங்கள்
விடுதலைப் பாதையில்
நடந்ததை.

சகோதரர்களே!
எங்கள் கண்ணீரைக் கேட்டால்
சொல்லும்..
நீங்கள்
வீரவணக்கத்துக்குரியவர்கள் என்று.



கந்தையா பேரின்பநாதன் (நாதன்)
( தமிழீழம் .அரியாலை)
(தமிழீழ விடுதலைப் புலிகளின்
சர்வதேச நிதிப் பொறுப்பாளர்)
தாயக மண்ணில் :10.10.1964
வீரமரணம் :26.10.1996

தமிழ் மாணவர் அமைப்பு-யேர்மனிக்கிளை